2013 ஏப்ரல் 9]

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி அந்த இடத்தில் நியாயமான நீதி கிடைக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. அங்கேயிருக்கின்ற கடைகளை அப்புறப்படுத்துவதற்கு ஏற்கெனவே நாங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கின்றோம். கூடிய விரைவில் அதற்கொரு முடிவு ஏற்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 192, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

192—

மாணவியர் விடுதி

***8922—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் பொற்கால முதல்வர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய ஆட்சியில் தமிழகத்திலுள்ள அனைத்துக் குழந்தைகளும் கல்வி கற்க வேண்டும், கல்வியைக் கற்க எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்று, கல்வி கற்கும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து வசதிகளையும் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். வேடசந்தூரில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி மாண்புமிகு

அம்மா அவர்களின் கருணையாலும், ஆணையின்படியும் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. வேடசந்தூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

திரு. ச. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாத மலர்களை வணங்குகின்றேன். காணாமல் போகவிருந்த காவேரியை மீட்டெடுத்த காவல் தெய்வம் காவேரித் தாய் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கெல்லாம் அன்னதானம் வழங்கிய அன்னபூரணி எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உற்பத்தியைப் பெருக்க உழவர் திருவிழா கண்டவர் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவை மீட்டே தீருவோம் என்று சூளுரைத்த வீரமங்கை வேலுநாச்சியார் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியமைத்த இரண்டே ஆண்டுகளில் 51 கல்லூரிகளைத் திறந்து உயர் கல்விக்கு வித்திட்ட சரஸ்வதி தேவி எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக் கல்விக்கு 16,965.30 கோடி ரூபாயை வாரி வழங்கிய கருணைத் தாய் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதியோர் உதவித் தொகையை ரூபாய் 500-லிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தி முதியோர்களின் வாழ்க்கையில் நம்பிக்கையைத் திகழவைத்தவர் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் தமிழகமே எழுச்சிபெற்றது, வளர்ச்சிபெற்றது, 2023 தொலைநோக்குத் திட்டம் பெற்றது. அதைப் பார்த்த பாரதமே, அம்மா தங்களை வரவேற்கத் தயாராகிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

எனது வேடசந்தூர் தொகுதியில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் இரண்டாயிரம் மாணவிகள் கல்வி

பயின்று வருகின்றனர். அவர்கள் அனைவரும் கிராமப்புறத்திலிருந்து வரக்கூடிய ஏழை மாணவிகள். அவர்கள் அங்கேயே தங்கி கல்வி பயிலும் வகையில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி ஒன்றை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று அன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூரில் தேவை இருப்பின் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அங்கு பள்ளி மாணவியர் விடுதி துவக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. ச. பழனிச்சாமி: *கேட்காமலேயே கொடுக்கக்கூடியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இன்றைக்கு வேடசந்தூர் பகுதியில் கல்வி பயிலக்கூடிய மாணவிகளுக்கு, மாணவியர் விடுதி பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கணிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அமைத்து கொடுப்பதற்கு பரிசீலனை செய்வதாக அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*